உ
குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

உ..ர் 2. ...சித்திரபானுஸ்ரீ தைமீ—1943 பிப்ரவரி. இதழ் 3.

இ (திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச்
கொ சொந்தமான புள்ளிருக்குவேளூர் தேவஸ்தானம்)

ஸ்ரீ செல்வமுத்துக்குமர ஸ்வாமி
வெள்ளி ரதத்தில் திருவுலாகாட்சி
4—2—43ல் நடைபெற்றது.

# கலைவளர்ச்சி

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24-வது குரு மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமய வளர்ச்சிக்கும், கலைவளர்ச்சிக்கும் பல வழிகளில் உபகரித்து வருதல் போல ஏழைமாணவர்களுக்கு இ வசக்கல்வி வழங்கச் சென்றமாத முதல் அரசியல் உதவி பெ ஆரம்பப் பாடசாலை ஒன்றைத் தொடங்கி நடத்திவர உத்தரவி நடந்து வருகிறது.


தஞ்சையில் சரபோஜி மன்னரால் ஏற்படுத்தப்பட்ட சரசுவதி மால் நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பட்டிருக்கும் ஆராய்ச்சிக் குழுவிற்கு ரூ. 2500 நிதி அளித்து உதவியுள்ளார்கள்.

அவ்வக்காலங்களில் ஏற்படும் பஞ்சப்பிணியால் துன்புறும் ஏழைமக்களுக்குப் பல்லாற்றானும் உதவிவருதல் போல இக்காலத்தில் பல உணவுப்பொருள்களும் விலை ஏறி விற்பதால் இன்றியமையாத உணவுப் பொருளாகிய அரிசியை வாங்கி ஏழைகளுக்குக் குறைந்த விலையில் விற்கத் தஞ்சைக் கலெக்டர் அவர்கள் செய்துள்ள ஏற் பாட்டுக்கு உதவி நிதியாக ரூ. 2500 அளித்துள்ளார்கள்.

தஞ்சை ஜில்லா மிராசுதார் கழகத்தின் போஷகர்களாக அமர்ந்திருக்கவும் திருவுளம்பற்றி யுள்ளார்கள்.

## சமயப் பிரசாரம்

இவ்வாதீனத்தைச் சேர்ந்த திருநள்ளாறு ஸ்ரீ தெர்ப்பாரண்ய சுவாமி ஆலயத்தில் 28-1-43 வியாழக்கிழமையன்று திருநின்ற சருக்கம் என்னும் பொருள்பற்றித் தருமபுர ஆதீன சைவப்பிரசாரகர் தண்டமிழ்ப்புலவர், குறுக்கை திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.



உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சித்திரபானுஷூ தைமீ 1943—பிப்ரவரி. | இதழ் 3 |
|---|---|---|

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. சிவாகமசீலம். 95

2. ஞானசம்பந்தம்—
திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள்,
தருமபுர ஆதீன சைவப் பிரசாரகர். 100

3. **திருவெம்பாவை—**

வித்துவான், திரு. மு. ஆறுமுகதேசிகர் அவர்கள்,
தருமபுர ஆதீன நூல்நிலைய மேற்பார்வையாளர். 105

4. **தெய்வமணக்குஞ் செய்யுள்—**

திரு. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள்,
தேவஸ்தான ஓதுவார், வலிவலம். 108

5. **திருவுந்தியார் உரைநடை—**

திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B.A., L.T.,
பச்சையப்பன் உயர்தரப் பள்ளி, காஞ்சிபுரம். 111

6. **திருவைந்தெழுத்தின் பெருமை—**

வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்,
M.A., B.L., தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 113

7. **சிவராத்திரி மகிமை—**

திரு. சா. முத்துவேல் தேசிகாவர்கள், சிதம்பரம். 117

8. **சிவபூஜாஸ்தவம் உரைப்பாயிரம்—**

இலக்கணம். ஸ்ரீமத். முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள்
அவர்கள், சிவஞானத் திருத்தளி, சிதம்பரம். 123

9. **The Four Paths —**

Late J. M. Nallaswami Pillai B.A., B.L. 124

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

---

## சிவாகம சீலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிவாகமங்களெல்லாம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்கள் உடையன. பாதம்= பகுதி. அந்நான்கனுள் சரியை, கிரியை இரண்டும் சிவதன்மம் எனப்படும்.

"நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தா னனழியும்—வல்லதனால்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா வரன்."

என்னும் திருக்களிற்றுப்படித் திருவெண்பாவால் அறியலாம். இந்தச் சிவதன்மமே உயிர்கட்குத் தீவினை நோய் வாராமே தவிர்க்கவல்லது; சிவயோக சிவ ஞானங்களை விளைக்கவல்லது; என்பது,

"திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்த பிரான்."

என்னும் ஆளுடையபிள்ளையார் தேவாரத் திருப்பாட லால் இனிது விளங்கும்.

சிவதன்மம், மெல்வினை எனவும் வல்வினை எனவும் இருதிறப்படும். அவற்றுள், மெல்வினையாவது எம்போல் வாரும் செய்தற்கெளிதாய் சிவாகமங்களில் விதிக்கப் படும் வைகறைத் தியானம் முதலிய நித்திய கருமங் களாம். வல்வினையாவது உலகியல் நிலையிலுள்ளா ரால் செய்தற்கரியனவாய் முற்பிறவிகளில் ஈட்டிய பெருஞ் சிவ புண்ணியத்தால் விளைவதாகி முறுகி வளர்ந்த அன்பின் பெருக்கால் நூல் விதி வரம்புட் படாது திருவருள் வயப்பட்டு நின்று செய்வது. இவற்றை,

"மெல்வினையே யென்ன வியனுலகு ளோர்க்கரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ்—சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வார்
பவகன்ம நீங்கும் படி.

ஆதியை யர்ச்சித்தற் கங்கமு மங்கங்கே
தீதி றிறம்பலவும் செய்வனவும்—வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு.

வரங்கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினா லன்றுகறி யாக்க—விரங்காதே
கோல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
ஐய விதுவமுது செய்கென்று—பையவிருந்
தூட்டி யறுத்தவற்கே யூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம்.

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்—சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தஞ்செயலாற் றான்."

என்னும் திருக்களிற்றுப்படித் திருவெண்பாக்களால் தெளிவாக அறியலாம்.

முன்னைப் பிறவிகளிலே மெல்வினையாகிய சிவாகம சீலங்களைச் செம்மைபெறச் சலியாது முயன்று செய்து கொண்ட தவமுடையாரே பின்னைப் பிறவியிலே முற் செய் தவப்பயனுல் முறுகி வளர்ந்த அன்பினுல் விதி நூல் வரம்பிறந்து செயற்கருஞ் செய்கை செய்து சிவானந்த வாழ்வு பெற்ருர் என்பது உண்மை நூற் றுணிபாம். இவ்வுண்மை திருக்கண்ணப்பதேவருடைய முற்பிறவிச் சரிதம் பற்றியும் தெளிந்து கொள்ளலாம். அது வருமாறு:—

திருக்காளத்தியிலே நாள் ஆறில் கண்ணிடந்தப் பிய திண்ணப்பதேவர் முற்பிறப்பிலே பாண்டவருள் நடுவணுள்ள அருச்சுனராய் இருந்தவர். அவர் வேத சிவாகம விதிப்படி ஸ்ரீ பஞ்சாக்கரஞ் செபித்துச் சிவ பிரானது திருவுருவைத் தியானஞ் செய்து பிறராற் செய்தற்கரிய பெருந்தவஞ் செய்தவர் என்பது,

“ஆசினுன் மறைப்படியு மெண்ணில் கோடி
யாகமத்தின் படியுமெழுத் தைந்துங் கூறிப்
பூசினுன் வடிவமெலாம் விபூதி யாலப்
பூதியினைப் புரிந்தசடைப் புறத்தே சேர்த்தான்
தேசினு லப்பொருப்பின் சிகர மேவுஞ்
சிவனிவனே போலுமெனத் தேவ ரெல்லாம்
பேசினுர் வரிசிலைக்கை விசயன் பூண்ட
பெருந்தவத்தி னிலைசிலர்க்குப் பேச லாமோ.

வலப்பாகஞ் செழும்பவளச் சோதியென்ன
வாணீலச் சோதியென்ன மற்றப் பாகங்
கலப்பான திருமேனி யணிந்த நீற்ருற்
கதிர்முத்தின் சோதியென மேனை யீன்ற
குலப்பாவை யுடன்கயிலைக் குன்றில் வாழ்விற்
குன்றுடையோன் றிருக்கோலங் குறிப்பா லுன்னிப்
புலப்பாடு புறம்பொசிய மார்புந் தோளும்
பூரித்தா னுடல்புளகம் பாரித் தானே.”

என்னும் வில்லி பாரதச் செய்யுட்களால் அறியப்படும். இங்ஙனம் பொதுவாகிய காமிய தவம் செய்த அருச்சுனர் அத்தவ முடிவிலே தாம் விரும்பிய பாசுபதாஸ்திரத்தை விடுத்து முத்தியை வேண்டிக்கொள்ளுதலும், பெருமான், அருச்சுன! அத்திரம் வேண்டித் தவம்புரிந்தனை; இப்போது அதனைப் பெற்றுக்கொள். எம்மை வேடன் என எண்ணினை ஆதலின் நீ அடுத்த பிறவியில் வேடனாகவே பிறந்து அப்பிறப்பிற் கேற்ற முறையால் அன்புருவாகி எம்மைப் பூசனை புரிதி. அக்காலை உனக்கு முத்தி வழங்குவோம் என்றருளினார். அருச்சுனர் அவ்வருளாணையை மேற்கொண்டு சாங்காறும் சிவாகம விதிப்படி சிவபூசை செய்தனர். அவர்தம் முற்பவக் கதை, "திண்ணனார்முற் பிறப்பினிச் செப்புதும்" என்று தொடங்கி,

பாண்டு மைந்தருட் பார்த்தன் பகைஞர்மேல்
தூண்டி வென்றிடச் சூர்ப்பகைத் தாதையை
வேண்டி யோர்கணை வாங்குதும் வெய்தென
மாண்ட விந்திர நீல மலையின்மேல்.

இந்த வாறங் கிருந்து தனஞ்சயன்
நந்தி லாத்தவ மாற்றி னனுகிட
முந்து நாளின் ...

முக்க ணெம்பிரான் முதல்வியுந் தானுமாய்
    மூரிவெள் விடையேறிச்
சக்க ரத்தரி முதலிய தேவர்க
    ளணித்தனி புகழ்ந்தேத்த
மிக்க பேரருட் டலைமையி னிற்பதை
    விசயனு மிகக்கண்டான்
அக்க ணத்தினி லவன்செய விதுவென
    வறைந்திட வார்வல்லார்.

பத்தியிற் பணிந்துபின் பாண்டு மைந்தனும்
மெத்தவெம் பவத்தினான் மிகவும் நொந்தனன்
அத்தனின் னருளினா லடியனே னுய்ய
முத்தியை யருளென முதல்வன் கூறிடும்.

வாங்குவிற் றடக்கையாய் வாரி சூழ்நிலத்
தோங்கிய பகைஞரை யொறுக்கி மாற்றினால்
தீங்கறு கணைபெறச் சிந்தை செய்துநீ
ஓங்கிய தவமிக உஞற்றி வைகினாய்.

முன்னிய பகழிநீ கோடி முன்னென
தன்னிகர் சங்கரன் றான ளித்தெமை
இன்னல்செய் வேடனென் றிகழ்ந்து கூறினை
அன்னதால் வேட்டுவ வரச னாகியே.

தென்றிசைக் கயிலையைச் சென்று சேர்ந்துநீ
குன்றவி லன்புருக் கொண்டு நம்மய
நன்றிகொ ளிலிங்கபூ சனைநற் பத்தியால்
ஒன்றையு முணர்ந்திடா துவந்து செய்தரோ.

கோலமே முதலிய விலங்கு கொன்றுநீ
சாலவே தசையமு தருத்திச் சாருநாள்
ஏலவே முத்தியு மீதும் போவெனா
நீலமார் களத்திறை நீங்கி னானரோ.

—சீகாளத்திப் புராணம்.

என்றிங்ஙனம் முடியக் கூறுஞ் செய்யுட்களால் அறிகின்றோம்.

(வரும்.)

# ஞானசம்பந்தம்

[58-வது பக்கத் தொடர்ச்சி]

ஞானசம்பந்தம் என்ற சொல் ஐந்தெழுத்தைப் போலவே உயிருக்கு உறுதி பயக்கும் என்னலாம். சேக்கிழாரும் மந்திரியாகிய குலச்சிறை நாயனார் பாண்டிய மன்னனுக்கு செவியிடைப்பட அறிவித்தார் என்ற விடத்து "ஞானசம் பந்தனென்னும் நாம மந்திர மும்" எனக் கூறுவராயினர். இவ்ஞானசம்பந்தத்தால் உயிர்கள் அடையும் பேரின்ப நிலையையேதான் வீட்டின்பமென்றும், முத்தியின்பம் என்றும், பேரா வின்ப மென்றும் பல பெயரிட்டுக் கூறுவர்.

இதுகாறும் கூறியவாற்ருல், எண்ணில்லாதனவாய உயிர்களுக்குப் படிமுறையில் அறிவை வளரும்படிச் செய்து, இம்மெய்ஞானந்தந்து மலவலியைக்கெடுத்து, ஞானவாரிமடுத்து, நிரதிசயமான பேரின்ப வெள்ளம் துய்ப்பிக்குமாறு தனது திருவடியிற் கூட்டவேண்டு மென்ற பெருங்கருணையேதான் இறைவன் உயிர்களைத் தனு கரண புவன போகங்களோடு கூட்டி, மாருது தனது ஆணையாகிய சிற்சத்தியைக்கொண்டு ஐந்தொழிற் படுத்துகின்ருன் என வேதசிவாகமங்களும் அதன் சாரமாகிய சித்தாந்த நூல்களும் கூறுகின்றன. எனவே இம்மெய்ஞானம் பெற்றுச் சாதனம்செய்து இறைவ னது சீர்பாதங்களைக் கூடிக்கலந்த உயிர்கள் மீண்டு இம்மாயா வியந்திரமான உடலிடைப்பட்டுப் பிறந்து இறந்து உழல்வதில்லை; ஐந்தொழிற்படுதலும் இல்லை யென்பது துணிபு.

" ... ... பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே."

—திருவாசகம்.

இவ்வாறு உயிர்களுக்குப் பலபிறப்பாலும் வேதியிடைப்பட்ட பொன்னுக்கு மாத்துயர்ந்தாற்போல, நல்லுணர்வுவந்து, கண்டவற்றை இஃதன்று இஃதன்று எனக் கண்டு கழித்து சித்தவிர்த்தியும் ஒடுங்கி நிற்கும் பருவத்து மெய்ஞானந்தந்து, ஆட்கொள்ள வருபவர் இறைவரேயாம். அஃதாவது பிறவிகள் தோறும் கரணங்களாலும் கருவிகளாலும் பாலில் நெய்போல் உண்ணின்றுணர்த்திய நாதனே ஞானசாரியனாய் வெளிப்பட்டு நீ என்னையும் உன்னையும் மறந்து புலனிடைப்பட்டு எண்ணில்லாத காலம் உழன்றனை, நின்றன்மை இதுவாகுமென மொழியாது மொழிந்து கேளாது கேட்பித்து நோக்கால் பழவினையைப் போக்கி பிராரத்துவம் புசிப்பித்து ஆகாமியமெனப் படும் புதிய வினையையும் ஏறாது தடுத்துத் திருவடிகளைப் பற்றுக என அனுக்கிரகித்து அயரா அன்பு தந்து முத்தியின் அந்தமாகிய முளிரித்தாட்கீழ் வைப்பன். இதுவே அவரது திருவுள்ளக்கிடையும், கடமையுமாகிய பெருங்கருணையாகும்.

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சென்னமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்"

—சிவஞான சித்தியார்.

எனினும் தானேவந்து உணர்த்தாது உணர்த்தக் கேளாது கேட்டு அடையும் பருவமில்லாதாரையும் அவ்வவர்க்குரிய முத்திப் பதங்களில் வைக்கவேண்டுமென்ற பெருங்கருணைத் திறத்தால் பதமுத்திகளில் வைகும் முத்தான்மாக்களை அவதரிக்கும்படித் திருவருள் புரிந்து அவர்களுக்குத்தானே முன்னின்று உணர்த்தி அவர்களைக்கொண்டு ஏனையோர்கட்கும் அனுக்கிரகிப்பான். ஆனால் இவ்வாசிரியர்களுக்கு உண்ணின்று உணர்த்தும் தன்மையில்லை என்னலாம்.

இவ்வாறு உயிர்களுக் குணர்த்தி இறைவனது திருவடித் தொண்டின் நிலைதர வந்து, அவதாரஞ் செய்தவர்களே சமயாசாரியர்கள் எனப்படுவர்.

இச் சமயாசாரியர்கள் உயிர்களுக்கு உணர்த்தியதுபோலவே உண்மை ஞானத்தைப் பரம்பரையாய் ஸ்ரீகண்டபரமேசுரன்பால் நந்தியெம்பெருமான் கேட்டருளியவற்றை சனற்குமார முனிவற்குணர்த்த அவர் சத்தியஞானதரிசனிகட்குணர்த்த இப்படி ஒருவர்பால் ஒருவர் கேட்டு அவ்வுண்மை ஞானத்தை உணர்த்திவரும் பரம்பரையே சந்தானசாரியர் பரம்பரை யெனப்படும். சந்தானம்=தொடர்ந்து வருவது. எனவே மேற்கூறிய சமயாசாரியர்களிலும் சந்தானசாரியர்களிலும் பண்படியாகப் பிறந்த செம்மைமொழியாகிய இவ்ஞானசம்பந்தமென்னும் திருநாமத்தையே திருநாமமாகப்புனைந்து உயிர்களுக்கு ஞானசம்பந்தம் உணர்த்த அவதரித்த ஞானச் செல்வர்கள் இருவர்களாம்.

இவ்விருவரில் சமயாசாரியரில் முதற்கண் வந்தருளினோர் சீகாழித் **திருஞானசம்பந்தப்** பெருமானாகும். இரண்டாவது சந்தானசாரிய பரம்பரையில் வந்தருளியவர்களே **ஸ்ரீமத் குருஞானசம்பந்தப்** பெருமானாகும். இக்குருஞானசம்பந்த சுவாமிகளேதான் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து ஆதி குருமூர்த்தியாய் விளங்கியவர்கள்.

சமயாசாரியரில் முதற்கண் வைத்தெண்ணப்படும் திருஞானசம்பந்தப் பெருமான் சோழநாட்டில் காழியம்பதியில் கவுணியகோத்திரத்தில் அவதரித்து மூன்றாவது பிராயத்தில் பிரமதீர்த்தக்கரையில் வேதநெறி தழையவும், சைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும் மலர்வாய் திறந்தழுது அம்மையோடப்பனை விடைமேல்வருத்தி, மெய்ஞானத்தோடு சிவஞானமுண்டு தந்தையார்க்குக் காட்டுவார்போல் இறை

வனைச் சுட்டித், தோடு என்னும் பாசுரமுதலாய்த் தொடங்கி வேதாகம சாரமாகிய உண்மைகளைத் தென்றமிழ் மொழியால் நாமெலாம் ஈடேறும் வண்ணம் சிவனுறை விடங்கடோறுஞ் சென்று பாசுரங்களாய் மொழிந்து, இறைவர்பால் பொற்றாளம், முத்துச்சிவிகை, சின்னம், படிக்காசு முதலியன பெற்றும், தீ, நீர் முதலிய பொருள்கள் சிவநெறியை உணரும்படிச் செய்தல், என்புக்கு உயிர்கொடுத்தல்; மறைக்கத வடைத்தல் முதலிய பற்பல திருவருட்செயல் விளைவித்தும் திருமணநல்லூர் என்னும் ஞானபூமியில் திருமணக் கோலத்தோடும் அடியார் குழாத்தோடும் மணத்தில் வந்த ஏனைய பலரோடும் ஞான ஒளிச்சூழலிற் காதலாகி யென்னும் பதிகமோதிப்புக்கு உடனுகி இறைவனது திருவடி நிழலிற்கலந்து பெருவாழ்வு பெற்றனர் என்பதும் அவர்கள் செய்தருளிய தேவாரப்பதிகங்களே நமது சைவத் திருமுறையில் முதல் மூன்று திருமுறையாக வைத்து ஓதி உலகம் உய்ந்து வருகிறதென்பதும் அன்பர் அறிந்ததே.

அத் திருஞானசம்பந்தப் பெருமானே சில நூற்றாண்டுகளுக்குப் பின் உயிர்களுக்கிரங்கி உய்வகை காட்ட இறைவனது திருவருளால் மீண்டும் ஒருமுறை வந்து அவதாரமானர்களென்று சொல்லும்படி பாண்டிவளநாட்டிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலே சைவ வேளாளர் குலத்திலே அவதாரஞ்செய்து மிகச் சிறு பிராயத்திலே துவாதசாந்தமாகிய திருவாலவாயை யடைந்து அங்கயற்கண்ணிபங்கனை வழிபடுங்கால் சிவ பூசையில் விருப்பமிக்குடையாராகிக் காதல்கொண்டு மலர்க்கண்களில் நீர்த்துளி ததும்பக் கசிந்து நிற்க, சொக்கலிங்கப்பெருமான் அருளால் பொற்றாமரைத் தடத்துச் சிவலிங்கம் கைவரப்பெற்று, அப்பிராயத்தில் அப்பொழுதே அச்சொக்கநாதருக்குச் **சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை** என்னும் இரண்டு தோத்திரத் தொகைப்பாடல்களைச் செய்தருளிப், பின்

னர் இறைவன் ஆணைவழி மூலட்டானமாகிய திருவாரூரையடைந்து அங்குத் திருக்கயிலாய பரம்பரையில் உபதேசம்பெற்று ஞானச் செல்வராய் விளங்கிய கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் உபதேசம்பெற்று, பூசை நெறி தெளிந்து அவர்கள் தந்த ஆணை வழியே புண்ணிய பூமியாகிய திருத் தருமபுரமடைந்து தாம் ஆலவாயில் திருவருளாற் பெற்றுவந்த சொக்கலிங்கப் பெருமானை ஆகமவழி பூசித்துச் சிவபோகந்துய்த்துக் கொண்டு தொண்டர்கள் புடைசூழ ஞானதினகரனாய் விளங்கித் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டுமென்று திருவுளங்கொண்டு சித்தாந்த நூல் களின் முடிந்த பொருளாய் விளங்கும் சிவபோகசாரம், முத்திநிச்சயம் முதலிய அருள்நூல்களைச் செய்தருளிப் பற்பல அற்புதமியற்றி ஞானநிட்டையாகிய சமாதி கூடிச் சித்தாந்தமுத்தி யெய்தினார்கள். அச்சொக்க லிங்கமூர்த்தியே இப்பரம்பரையின் ஆத்மார்த்த பூசா மூர்த்தியாக இருந்துவருகிறது. இக்கருத்தையே இவ் வாதீனத்து நான்காவது பீடத்து எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகமூர்த்திபால் உபதேசம் பெற்ற குமரகுருபர சுவாமிகள் பண்டார மும்மணிக் கோவையில்

"அமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளமை விடுத்த தள்ளரும் பருவத்து
உள்ளதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தன்
பொன்னடிக் கமலம் சென்னிவைத் திறைஞ்சுதும்."

என்று கூறியிருத்தல் காண்க.

தருமபுர ஆதீன சைவப் பிரசாரகர்,
குறுக்கை மீ. சுந்தரம் பிள்ளை.

குருபாதம்

# திருவெம்பாவை

(வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள்.)

(68-ம் பக்கத்தொடர்ச்சி)

பின்னர் மூவருமாக மற்றொரு இல்லிற்குச்சென்று "முத்துப்போலும் பற்களை யுடையவளே! எங்களுக்கு முன்னாக நீ எழுந்து வந்து இறைவனெனக்குத் தந்தை; அவன் இன்ப உருவினன்; அமுதுபோன்றவன் என்று வாயினிக்கப் பேசுவாய்,(இன்று நாங்கள் வந்து உன்னை எழுப்பியும் நீ) கதவைத்திறந்து வெளிவராதிருக்கின்றாய் (என்று கூற, அதற்கு உள்ளிருந்த மாது) நீங்கள் ஈசனிடத்தில் மிகுந்த பற்றுள்ளவர்கள். மேலும் பழைய தொண்டர்கள். மிக்க உரிமையுடையவர்கள். (ஆதலால்) புதிதாக வந்த அடியேங்களது சிறுமை தீர்த்து ஆட்கொண்டால் அது தீயதாகுமோ? (என்றாள். அதற்கு வெளியில் நின்றவர்கள்) நின் அன்புடைமை எத்தகையது? அதை நாங்கள் அறியாதவர்களா? மனந்தூய்மையானவர்கள் இறைவனை ஏத்தமாட்டார்களா? (அது எவ்வாறாயினும்) உன்னைத் துயிலெழுப்பவந்த எங்களுக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும் என்று தம்மைத்தாமே நொந்து கொள்ள, அம்மாதும் துயில் நீங்கி வெளிவந்தனள்.

அந்நால்வரும் வேறொரு வீட்டிற்குச் சென்று அங்குத் துயில்கொள்ளும் மாதினை எழுப்பத்தொடங்கி "நித்திலநகையாய்! உனக்கு இன்னும் பொழுது புலரவில்லையோ? (என, உள்ளிருந்தமாது) அழகியகிளி போன்ற சொற்களைப் பேசுகின்ற ஏனையோரும் வந்துவிட்டார்களோ? (என்றுவினவ, வெளிநின்றவர்கள்) யாங்கள் எல்லோரும் எண்ணிக்கொண்டு உண்மையைச் சொல்லுகின்றோம். அதுவளவும் நீ கண்களை மூடிக்

கொண்டு காலத்தை வீணாகப் போக்காதே. ஆனால் கண்களுக்கு இனிய காட்சிதரும் கருணைவள்ளலைப் பாடி மனங்கசிந்து உருகாநின்றோம்; நீயேவந்து அப்பாவையர்களை எண்ணிக்கொள்வாய். யாரேனும் குறைந்தால் மீண்டும் போய்த் துயிலுக" என்ன, அம்மாதும் துயில் ஒழிந்து வெளிவந்தனள்.

ஐவருமாக மற்றோர் இல்லத்திற்குச் சென்று "பிரம விட்டுணுக்களாலும் காணப்படாத மலை போலும் வடிவினையுடைய இறைவனை நாமே அறிவோம் என்று பாலும் தேனும் போல மிக இனிமையாகப் பொய்வார்த்தைகளைப் பேசுகின்றவளே! யாவராலும் அறிதற்கரிய இறைவனது திருஉருவத்தையும், நம்மை ஆட்கொண்டுச் சீராட்டுகின்ற பெருங்குணத்தையும் நாங்கள் வாயாரவாழ்த்திச் சிவனே, சிவனே என்று ஓலமிட்டாலும் நீதுயிலொழிந்துவந்து வாயிலைத் திறந்து வெளிவருவாயல்லை; உன்தன்மை இதுதானோ?" என்றவுடன் அவளும் துயில்நீங்கி வெளியேவந்தாள்.

அறுவரும் வேறொரு மனைக்குச் சென்று மான் போலும் விழியினை யுடையவளே! "இன்னும் பொழுது புலரவில்லையா? நீ நேற்று வெட்கமில்லாமல் நானே வந்து உங்களை எழுப்புவேன் என்று கூறினையே. அச்சொல் இன்று எங்குப்போயிற்று? யாவராலும் அறிதற்கரிய இறைவன் தாமே வலியவந்து எங்களுக்கு அன்புதந்து ஆட்கொண்டருளினான். ஆதலால் அவனது திருவடிகளை வாழ்த்திக்கொண்டுவந்த எங்களுக்கு நீ உன்வாய் திறந்து ஒன்றுங் கூறலாகாதா? அப்பாடலைக்கேட்டு உடல் உருகுகின்றாயல்லை. இத்தன்மை உனக்கே பொருந்தும்" என்ற அளவில் அம்மாதும் துயிலொழிந்து வெளியே வந்தனள்.

பின்னர் எழுவருமாக மற்றோர் இல்லத்திற்குச் சென்று "தாயே! தேவர்களாலும் நினைத்தற்கரிய

பெரும்புகழையுடைய சிவபெருமானது சின்னமாகிய சங்கு முதலியவற்றின் ஒலிகள் கேட்பச் சிவன் என்று வாய்திறப்பாய்; தென்னா என்று பிறர்சொல்லு முன்னரே அனலிடைப்பட்ட மெழுகுபோல உருகுவாய்; ஆனால் இப்போது யாங்கள் என்னுடைய பெருமான்; என்னுடைய அரசன்; இன்னமுதன் என்று தனித் தனியே கூறுநின்றோம். (அவை உன்காதில் விழவில்லையா?) இன்னமும் துயில்கின்றனையோ? வன்னெஞ்சுடைய அறிவிலிபோல வீணே கிடக்கின்றாயே; நின் தூக்கத்தின் அழகுதான் என்னே!" என்றவுடன் அம்மாதும் துயில் நீத்து வந்தனள்.

எண்மரும் ஒருங்குசென்று கடைசி வீட்டிற்குச் சென்று, "கோழிகள் கூவவும், ஏனைய பறவைகள் எங்கும் ஒலிக்கின்றன; ஏழிசைகளும் இயம்பவே சங்கங்கள் எங்கும் ஒலிக்கப்பெறுகின்றன; ஒப்பற்ற மேலான ஒளிஉருவினனும், அருள் வடிவினனுமான இறைவனை யாங்கள் பாடினோம்; அவை உன்காதில் விழவில்லையா? இது என்ன தூக்கம்; சற்று வாயைத் திறந்து பேசமாட்டாயா? இறைவனிடத்து அன்புடைமை இவ்வளவுதானா? நீவாழ்க; ஊழிமுதல்வனாய் நிற்கின்ற ஒருவனையே பாடுக" என்ற அளவில் அவளும் துயிலொழிந்து வெளியேவந்தாள்.

பின்னர் ஒன்பதின்மரும் ஒருங்குகூடி இறைவனையும் அவனது அடியார்களையும் வாழ்த்திக்கொண்டு பூத்திகழும் பொய்கையில் பூம்புனல்பாய்ந்து விளையாடுதற்குச் செல்ல ஒருப்பட்டார்கள்.

உ

சிவமயம்

# தெய்வமணக்குஞ் செய்யுள்

[திரு. திருஞானசம்பந்த முதலியார், அவர்கள், வலிவலம்.]

(75-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வருட்காவிய முழுவதும் பசுபதிப்பெயரிய தனி முதற் கடவுளாம் பரசிவவழிபாட்டிற் றலைநின்று நாற் பாத வாயிலான் வீடுபேறெய்திய விழுத்தவ மிக்க உண்மை நாயன்மார்களது கருமஞான அருளொழுக்கங் களையே சரிதவாயிலான் எடுத்துரைக்கப்படுதலின், அம் மெய் வரலாற்றின் புண்ணியப் பொருட்டுறைக் கண்ணெல்லாம் தெய்வமணங்கேங்கி நிற்றல் இயல்பே யென்பது யார்க்கு மினிதி விளங்கிக் கிடப்பதொன்றா மெனினும், மற்றவைகளான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தைந்திணை வளன் தழீஇ நடைபெறும் நாடுநகரச் சிறப்புக்களினும், ஆறு மலை கானங்களின் எழில்களினும், அருணோதயத்தின் அழகொளிபரப்பினும், செக்கர்வான் சிறப்பினுஞ்செஞ் சுடரணியினும், தண்கதிர்மதியத் தெண்ணில் பேரழகி னும், அகனைந்திணையின் அன்புடைக் காம இன்பச் சுவையினும் தெய்வ மணங்கமழ்ந்திலங்கச் செய்யுளியற் றும் செம்புலமாட்சி பெரிதும் வியந்து பாராட்டற்குரிய தாதலின் அவ்வியல்புபற்றி வரும் நம் அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான் திருவாக்குக்களுள் ஒன்றைத் தாலிபுலாக நியாயம்பற்றிச் சிறிது ஈண்டுக் கூறுவான் புகுந்தேம்.

சோழவளநாட்டின் அணிகலன் எனச் சிறந்து அழகொளி பரப்பும் காவிரியாற்றின் மாபெருஞ்சிறப் பினை எடுத்திசைப்பான் புகுந்த ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

"வண்ணநீள் வரைதர வந்த மேன்மையான்
எண்ணில்பே ரறங்களும் வளர்க்கு மீகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது."

என்றதோர் அழகிய பாடலான் நம்முள்ளத்தினை புருக்கி அருட்பெருக்கிலே திளைக்குமாறு செய்தல் கவனிக்கற்பாலது. இங்கே மலைக்கட்டோன்றுதலானும், தனது நீர்வளத்தால் விளையுளாக்கி அறச்செயலனைத்தினையும் அளித்துதவலானும் மலையரையன் மகளாக அவதாரஞ்செய்து யாவராலும் அண்ணற்கரிய கண்ணுதற் கடவுளது இடப்பாகத்தைத் தம்மாட்சியாக வுடைய காமக்கண்ணியாரது கருணைப்பிரவாகத்தினை நிகர்த்துக் காவிரி விளங்காநின்றதென மலையரையன் பொற்பாவையொடுங் காவிரியாற்றினை உவமை கூட்டிய வாற்றான், அவ்வம்மையார் என்றும் பான்மொழிக் கன்னியாம் இளமைத் திருக்கோலம் தாங்கி விளங்குத லொப்ப இவ்வியாறும் என்றுந் தனது இளமைச் செவ்வி குன்றாத புனிதமுடைத்தாதலும், அம்மையாரது பெருங்கருணைக் கிலக்கானோர் சத்திநிபாத முற்றுப் பேரின்ப வீடெய்திப் பெரும்போகந்துய்த்த லொப்ப, இவ்வியாற்றினது பெருந்துறையின் மூழ்கிய நன்மக்களும், புனிதமுற்று அம்மைப் பெரும் பேறெய்துதல் திண்ணமாதலும், கருணை சொரூபியாக விளங்கும் அம்மையாரது திருவருட் பெருக்கு, என்றுங்குன்றா துலகினைப்பாதுகாத் தளித்த லொப்ப, இவ்வியாற்று நீரும் என்றும் தன்னீர்மை குன்றாது நம்நாட்டினைக் காத்தளிக்கவல்லதாதலும், அம்மையார் கண்ணுதலாகந் தோய்ந்து நின்றதொப்ப இவ்வியாறும் யாவரானும் அளித்தற்கரிய பெருங் கடலாகந் தோய்ந்து நிற்பதாதலும், உய்த்துணர வைத்த நம்சேக்கிழார் பெருமான் திருவுள்ளம் பெரிதும் போற்றற்பாலது.

காவிரியாறு என்றுந் தன்னீர்மை குன்றாதுலகினைப் பாதுகாத்தளிக்க வல்லதா மென்பது, "கோனிலை

திரிந்து கோடை நீடினும், தானிலைதிரியாத் தண்டமிழ்ப் பாவை" எனவரும் நாநலங் கனிந்த சீத்தலைச் சாத்தனாரது சொற்சுவை பழுத்த இனிய அழகிய மணிமேகலை அடிகளானும்,

"வசையில்புகழ் வயங்குவெண் மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி."

எனவரும் தமிழழகு பழுத்த உருத்திரங் கண்ணனாரது பட்டினப்பாலை அடிகளானும் எடுத்துரைக்கப்படுதல் காண்க.

அண்ணலாரது அருட்சத்தியாக விளங்கும் நமதம்மையார், என்றும் பச்சிளங் கன்னியாம் இளமைத் திருக்கோலந் தாங்கி விளங்குதல்,

"சிவம்சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே."

எனவருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க. இன்னும் உலகினை ஊட்டிவளர்த்து நிலைநிறுத்திக் காப்பது நீரேயாதல் ஒப்ப, அண்டசராசரங்களனைத்தினையும் ஆக்கியளித்து அருள்புரிந்து வருவது அருட்சத்தியே என்பதூஉம், எந்நீர்க்கும் மூந்நீராய் நின்றுதவுவது கடலேயாதலொப்ப இறைவியை எவ்வாற்றானும் பிரியாதொருங்கியைந்து நின்று உலகினைத் தன்னாணை வழி நிறுத்தி வினைமுதலாய் ஒளிர்வோன் இறைவனே என்பதூஉம் இதனாற் பெறக்கிடந்தவாறுணர்க.

(வரும்)

உ
சிவமயம்

# திருவுந்தியார் உரைநடை

[காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T.]
(81ம் பக்கத்தொடர்ச்சி)

## 11, 12-வது உந்திகள் *

இவற்றான் நிராதார யோகத்தின் இயல்பு கூறப்படுகின்றது.

**பொழிப்பு:-** தான் எல்லாவற்றையுங் கலந்து நின்றும் தன்னை ஒன்றுங் கலத்தலின்றித் தூய்தாய், மேல் ஆதார யோகத்தில் காட்சிப்பட்ட சகளம், சகள நிட்களங்கட்கு மேலாய் உள்ள நிட்கள சிவத்தைத் தன் முனைப்பற (காண்பானும் காணப்படும் பொருளுமாய்ப் பிரிந்து நில்லாது) உடனாய் நின்று நோக்குக. இங்ஙனமன்றித் தன் முனைப்பான் நோக்கின் அது கூடவராது. (11)

குறிப்பு:- தற்பரம் என்ற சொற்றொடர் அதற்கு மேலானது எனப்பொருள்பட்டு, ஆதாரயோகத்தின்பாற்பட்ட சகளம் சகளநிட்களங்களுக்கு மேலாய நிட்களசிவத்தை உணர்த்துகின்றது. நிராதார யோகமென்பது நிட்களத்தைப்பற்றிச் செய்வதென்பதை "இந்த யோகம் சகளம், சகளநிட்களங்களைப் பற்றிச் செய்யும் சாலம்பயோகமும், நிட்களத்தைப்பற்றிச் செய்யும் நிராலம்பயோகமும் என்றிருவகைப்படும்" என்னும் சிவஞான மாபாடியத்தான் உணர்க. சாலம்பயோகம், சாதாரயோகம்,

---

* தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காம னோக்கவென் றுந்தீபற. (11)

மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் றலைவரென் றுந்தீபற. (12)

ஆதாரயோகம் என்பன ஒரு பொருளன. நிராலம்ப யோகமெனினும், நிராதார யோகமெனினும் ஒக்கும். நிட்களசிவம் பரஞ்சோதி என வழங்கப்படும்.

**பொழிப்பு:-** மகாதேவன் எனப்படும் சிவபிரான் கரணங்கள் வயப்பட்டு ஏகதேசவறிவுடையராய், ஆனால் அவற்றினீங்கி வியாபகஅறிவைப்பெற எண்ணொன்றும் வண்ணமிருக்கும் யோகிகளைத், தவத்திற்றலைவனாய் முன்னின்று, பரஞ்சோதி நிலையாகிய முற்றத்திற் கொண்டுபோய், ஆண்டு வியாபக அறிவுடையராகச் செய்யும். (12)

குறிப்பு:- 1. இது "10-ஆம் உந்தியிற் கூறிய உபாயத்தாற் கரணங்களைத் தனக்கு வேறாக வுணர்ந்து அவற்றினீங்கி நிற்பின் நாடோறும் நிகழும் உறக்கம் முதலியவற்றிற்போலத் தலைப்படுவது அஞ்ஞான கேவலமேயன்றிப் பிறிதில்லைபோலும்" என்னும் ஆசங்கையை "உறக்கம் முதலிய அவத்தைகளிற் போல வன்றி ஈண்டு எண்ணொன்றி முதல்வன் அருளைப்பற்றி நிற்றலாகிய யோகமுயற்சியிருத்தலின் கரணங்களைச் செலுத்தி நிற்கும் காரணக் கடவுளர்க்கும் காரணமாய், உயிர்க்குயிராய் நிற்கும் முதல்வன் (சாலப்பெரியர்) அவ்யோகமுயற்சியுடைய உயிரை நிராதாரம் எனப்படும் பரஞ்சோதி நிலையைத் தலைப்படுமாறு செய்யும்" என நீக்குகின்றது.

2. இதுகாறுங் கூறிய இருவகையோகங்களினியல்பை, "பாரணவும் புலனந்தக் கரணமொன்றும் படராமே நடுநாடி பயிலுநாதம், காரணபங் கயன்முதலாம் ஐவர்வாழ்வும் கழியுநெறி வழிபடவுங் கருதிமேலைப், பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவுநோக்கிப் புணர்ந்தணைந்த சிவாநுபவ போகமேவும், சீரணவு மவரன்றோ எம்மையாளும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே" என்னும் மாபுராண சாரத்தாற் றெளிந்து கொள்க.

3. 11, 12 ஆம் உந்திகளின் கருத்தை விளக்குவன 'ஆக்கப்படாத பொருளாய்' 'காண்கின்றதோர் பொருளை', 'பேசாமை பெற்றதனில்' என்னும் வெண்பாக்கள். [களிறு 26 - 28.]

(வரும்)

உ

குருபாதம்

# திருவைந்தெழுத்தின் பெருமை

[வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், M. A., B. L.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.]

(78-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் இத்திருவைந்தெழுத்தும் மனிதவுடம்பிற் பொருந்திய நிலையும், ஐம்பூதங்களோடு கொண்டுள்ள தொடர்பும் தெரிதற்பாலவை. நவ்விரண்டுங் காலாகவும், மவ்விரண்டும் உந்தியாகவும், சிவ்விரண்டும் தோள் மார்புகளாகவும், வவ்விரண்டும் வாயாகவும், யவ் விரண்டுங் கண்ணாகவும் பொருத்திக் காணலாம் எனச் சித்தர் நூல்களால் தெரியப்படுகிறது. இதை இவ்வாறே ஒரு சித்திரம் வரைந்து மனிதவுடம்பாய் முடிவதைக்காணலாம். ஐம்பூதங்களுள், மண்ணில் மட்டுமே கால் பொருந்தி இயங்கக்கூடும். ஆகையால் அதற்குரிய நகாரம் மண்ணைக் குறிக்கிறது. உந்திப்பாகமாகிய வயிறு, குடல்கள் நீர் நிறைந்தவை. ஆகையால் அதற்குரிய மகாரம் நீரைக் குறிக்கிறது. நீர்ப்பகுதிக்குமேல் இதயமுள்ள பாகம் அனலாகும். ஆகையால் அதற்குரிய சிகாரம் தீயைக்குறிக்கிறது. அதற்குமேல் காற்று. கண்டம், வாய் இவற்றினின்றெழும் ஒலி காற்றேயாகும். ஆகவே வாய்க்குரிய வகாரம் காற்றைக் குறிக்கும். அதற்குமேலுள்ள யகாரம் ஆகாயத்தைக் குறிப்பதாகும்.

சிவபெருமானின் திருநடனத்திலே இத்திருவைந்தெழுத்தும் அமைந்து மாறுந்தன்மை அறிந்து போற்றற்பாலது. சிவபெருமான் சிகாரமுதற்கொண்ட ஐந்தெழுத்தே திருமேனியாகக்கொண்டு ஆன்மாக்கள் பிறவியற்றுப் பேரருள் எய்தத் திருநடம்புரிவான். தன் திருப்பாதத்திலே நகாரமாகவும், திருவுந்தியிலே மகார

மாகவும், திருத்தோளிலே சிகாரமாகவும், திருமுகத்திலே வகாரமாகவும், திருமுடியிலே யகாரமாகவும் கொண்டருளி ஆடுகின்றான்.

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

என்பது உண்மை விளக்கம். இது பொதுவாகத் திருமேனியில் எழுத்துக்கள் அமைந்த முறையாகும். ஆனால் அவன் ஆடல்புரிகின்ற காலத்திலே இவ்வெழுத்துக்களின் குறியீடுகள் மாறி, உடுக்கையேந்திய திருக்கரத்திலே சிகாரமாகவும், வீசியெடுத்த திருக்கரத்திலே வகாரமாகவும், அபயமளிக்கும் திருக்கரத்திலே யகாரமாகவும், தழலேந்திய தனிக் கரத்திலே நகாரமாகவும், முயலகனை மிதித்த திருப்பாதத்திலே மகாரமாகவும் பொருந்தி நிற்கும்.

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்."

என்பது உண்மை விளக்கம். தான் திருக்கூத்து நிகழ்த்தும் முறையில் சிவபெருமான் தனது ஐந்தொழிலையும் வெளிப்படுத்துகின்றான். துடிக்கரத்தில் படைத்தலும், அமைத்த திருக்கரத்தில் காத்தலும், தழற்கையில் துடைத்தலும், ஊன்றிய திருப்பாதத்தில் மறைத்தலும், எடுத்த பொற்பாதத்தில் அருளலும் ஆக இவ்வாறு ஐந்தொழிலும் காணப்படும்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என்பது உண்மை விளக்கம். டமருகக்கரத்தால் மாயைதனைச் சிந்தி, தழற்கரத்தால் வல்வினையைச் சுட்டு,

ஊன்றிய திருவடியால் மலம்சாய அமுக்கி, தூக்கிய திருவடியில் அருளையேகொண்டு, அஞ்சல் என்னும் கரத்தால் ஆன்மாவை இன்பவாரிதியில் அழுத்தல் தான் ஐயனது ஆனந்தத் திருநடனமாகும்.

"மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்."

என்பது உண்மை விளக்கம். இதிலிருந்து ஐந்தெழுத்துக்களும் ஐந்தொழிற்கும் உரித்தாகும் முறைமையை அறிந்து கொள்ளலாகும். சிகாரம் படைத்தலையும், வகாரம் காத்தலையும், யகாரம் அருளலையும், நகாரம் அழித்தலையும், மகாரம் மறைத்தலையும் குறிக்கின்றன. இவ்வித மாண்புகளையுடைய திருவைந்தெழுத்தையும் நிறைந்த உள்ளொளியாகக்கண்டு அறிவாளிகள் அறிந்து கொண்டடைவர். வாகீசனாரும்,

"இல்லக விளக்கது இருள்கெடுப்பது
பல்லக விளக்கது பலருங் காண்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
நல்லக விளக்கது நமச்சி வாயவே."

என்று பாடியுள்ளார்.

திருவைந்தெழுத்தையும் உச்சரிக்கிற முறைமையிலே, தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம், சூக்குமா சூக்கும பஞ்சாக்கரம் என நான்கு விதமுள. வாசகம், உபாஞ்சு, மானசம் என உச்சரித்தல் மூன்று விதமாம். மானசம் மனதால் கணித்தலும் அறிவாற் கணித்தலுமென இருதிறமாம். அவற்றுள் அறிவாற் கணித்தலை எண்ணுதல் அல்லது தியானித்தல் எனவுங் கூறுப. ஈண்டு உச்சரித்தல் என்பது எண்ணுதல் அல்லது தியானித்தல் என்பதேயாகும்; அதாவது அறிவாற் கணித்தல். இதை அப்பர் தேவாரம்,

"விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிடமேதெனிற்
புண்ணி யன்புக லூருமென் னெஞ்சுமே."

எனவருவதிற் காணலாம். எண்ணி ஓதுதலாவது, ஓதுகிறவன் ஒவ்வொரு எழுத்தும் இன்ன பொருளைக் குறிக்கும் என்றும், சிகாரமாகிய சிவமும் யகாரமாகிய ஆன்மாவும் ஆண்டான் அடிமைத் தொடர்பில் நிற்கும் முறைமையையும், ஆன்மா மகாரமாகிய மலத்தையும் நகாரமாகிய திரோதத்தையுங் கடந்து ஞானம் அல்லது அருளாகிய வகாரத்தின் துணைகொண்டு ஞேயமாகிய சிவத்தை அடையும் முறைமையும் மனதின் கண் கசிந்துருகி நினைத்து சிவத்தில் அடங்கி உறைத்து நின்று கணித்தலாகும். இதையே காழிவள்ளலும், "நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்" என்றார்.

தீக்கைகளினலே கன்மங்களைப் போக்கினலும், பிராரத்த கன்மம் இந்த ஊனுடல் உள்ளமட்டும் பெருங்காயத்தின் மணம் போலப் பொருந்துதல் தவிராது. அப்படிப் பிராரத்த கன்மம் உண்டாகவே ஆகாமிய கன்மமும் ஏருதிராது. இக்கன்மங்கள், ஆசிரியன் ஓதிய முறையிலே திருவைந்தெழுத்தைத் தியானிக்கும் அடியார்களுக்குப் உடனுழாய் வந்து போகிறதொழிய அவர்கள் ஈடுபடத்தக்கதாக மேலிட்டு வருத்தாது. ஆகாமிய கன்மமும் ஏருது. ஆகையால் கன்மங்களை எல்லாம் அறவே ஒழிப்பதற்குத் திருவைந்தெழுத்தும் சிறந்த கருவியாகும். இதை அப்பர் தேவாரம்,

"விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்று மில்லையாம்
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே."

என்பதாலும் அறியலாம். (வரும்)

உ

சிவமயம்

# சிவராத்திரி மகிமை

(திரு. சா. முத்துவேல் தேசிகர் அவர்கள், பெரியமடம், சிதம்பரம்.)

மாசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தின் திரயோதசியும், சதுர்த்தசியும் எந்த இரவில் சம்பந்தப்படுகின்றனவோ அது சிவராத்திரி என்று சிவாகமங்கள் கூறுகின்றன. அச் சிவராத்திரியில் புத்திபூர்வமாகவேனும் அபுத்திபூர்வமாகவேனும் சிவபெருமானை வழிபடுபவர் சிவசாந்நியத்தை அடைவார்கள்.

முன்னொருகாலத்தில் மேற்றிசையில் மலையடிவாரத்தில் மிகக்கொடிய வேடனொருவன் சதா வேட்டையாடிக் கொண்டும் வழிப்போக்கர்களை யடித்தும் குடும்ப சம்ரக்ஷணை செய்துவந் தான். அவன் சிவராத்திரியன்று தான் கொடுக்கவேண்டிய கடனுக்காக ஒரு செட்டியால் ஓர் சிவாலயத்தில் தடுக்கப்பட்டான். அங்கு நடக்கும் சிவராத்திரி விருதத்தைப் பற்றிய வார்த்தைகளும், "சிவ சிவ" என்கிற நாமமும் அவன் காதில் விழுந்தன. பிறகு அச்சிவபக்தர்கள் நீகொடுக்க வேண்டிய கடனை நாளை காலையில் கொடுக்கலாம் என்று அவனை விடுவித்தார்கள். பிறகு அவன் மற்றவேடர்களைப் பார்த்து "சிவ சிவ" என்று உறக்கக்கூவி பரிகாசம் செய்ததுடன், இதென்ன இன்று, நகர ஜனங்கள் யாவரும் "சிவ சிவ" என்று சொல்லுகிறார்களே என்றும் கேட்பானாயினன். அவ்வேடன் அன்று பகல் முழுதும் அலைந்தும் ஆகாரம் ஒன்றும் கிடைக்காமல் சூரியன் அஸ்தமன மானதும் ஓர் ஜலக்கரை யோரத்தில், இரவில் தன்னைத் துஷ்டமிருகங்கள் வருத்தாவண்ணம் ஒருவலையை விரித்து அதனுள் தான் இருந்து தனக்கு நித்திரைவாராதிருக்க ஒரு குடிசையைக் கட்டத் தொடங்கினன்.

அந்த வலைக்குள் சுயம்புவான ஓர் மஹாலிங்கமும், அதனருகில் ஓர் வில்வவிருக்ஷமும் இருந்தன. அவன் தனது வழியைச் சுத்தப்படுத்தவேண்டி, வில்வஇலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டிருக்கும்போது சில இலைகள் பக்கத்திலிருந்த மகாலிங்கத்தின் சிரசிலும் விழுந்தன. அன்று அவனுக்கு ஆகாரம் கிடைக்காததினால் உபவாசமும் நேர்ந்தது. இப்படி அவ்விரவின் முதல்யாமம் கடந்தது.

அப்பொழுது பூர்ண கர்ப்பமுள்ள ஒருமான் அங்கு தண்ணீர்குடிக்கவர, அவன் அதைக்கண்டு ஒருஅம்பை எடுத்து அடித்தான். அது குறி தவறி அந்த வில்வ விருக்ஷத்தின்மீது பட்டு அநேக இலைகளை லிங்கத்தின் மீது உதிர்த்தது. வேடனோ நடுப்பகலில் சிவாலயத்தில் கண்ட சிவபிரானையே நினைத்துக் கொண்டும். குளிராலும் பசியாலும் வருந்தினவனாய் மற்றொரு அம்பை மானிடம் விட ஆரம்பித்தான் அப்பொழுது மான், மனிதவாக்கால் "நான் கருப்பம் உற்றிருக்கின்றேன். என்னைக் கொல்வதால் உன் குடும்பத்துக்குப் போதுமான ஆகாரமாகாது", என்று சொல்லிற்று. வேடனுக்கு உபவாசத்தாலும் பூசையாலும் கண்விழிப்பாலும் அவனுடைய பாபம் நாலில் ஒருபங்கு ஒழிய, மனிதவாக்கால் பேசும் மானைப்பார்த்து ஆச்சரியப்பட்டு நீ மனிதவாக்கால் பேசவேண்டிய காரணம் என்ன? நீயார்? எங்கிருந்து வந்தாய்? சொல் என்று கேட்டான்.

அதற்கு அப்பெண்மான், "ஆதியில் நான் சுவர்க்க லோகத்தில் இந்திரனுடைய அப்ஸரஸாயிருந்தேன். அப்பொழுது மிக்க வலிமையுடைய ஹிரண்யாக்ஷனென்பவன் என்னால் கணவனாக வரிக்கப்பட்டு வெகுநாள் அவனுடனிருந்து விட்டேன். பிறகு ஒரு சமயம் ஸ்ரீ சங்கரருடைய நர்த்தனத்தைப் பார்க்கப் போனேன். அப்பொழுது பகவான் என்னைப்பார்த்து,

இதுவரையில் நீஎங்குசென்றிருந்தாய் என்று கேட்டார். அதற்கு நான் நடந்ததைச் சொன்னேன். பகவான் கோபத்துடன், ஹிரண்யாக்ஷன் மிக்க காமமுள்ள ஓர் மானுக ஜனிக்கப்போகிருன், நீயும் அவனுக்கு மனைவியாக ஒரு பெண்மானுய்ப் பிறப்பாய். ஆகையால் சுவர்க்கத்தையும் தேவர்களேயும் விட்டு அவ்வசுரனையே போகிப்பாயாக. உனக்கு இந்தச்சாபம் பன்னிரண்டு வருஷம் இருக்கும். பிறகு எனது ஆவேசமுடைய ஒரு வேடன் உங்களைக் கொல்லவருவான். அப்போது அங்குக் காணப்படும் மஹாலிங்க சேவையால் சாபம் நீங்கும் என்று அருளினுர். இவ்விருண்ட வனத்தில் அவ்வாருன இலிங்கமும் காணப்படவில்லை. ஆகையால் என்னை விட்டுவிடு, சற்றுநேரத்தில் ஒரு கொழுத்த பெண் மான் இங்குவரும். அதை அடித்தால் உனக்குப் போதுமான ஆகாரமாகும். அப்படி அதுவராவிட்டால் நான் வீடு சென்று கர்ப்பத்தை யீன்று உறவினரிடம் விட்டுத் திரும்ப உன்னிடம் வருவேன்" என்று வேடனுக்கு நம்பிக்கை யுண்டாகும்படிப் பிரமாணம் செய்து போயிற்று.

இப்படி அம்மானின் வார்த்தையின் பெருமையாலும், அங்கு மறைந்திருக்கும் மஹாலிங்கப் பூசையின் பயனுலும் அப்போதே அவனது பாபம் முழுதும் நீங்கியது. பிறகு இரண்டாவது யாமம் வந்ததும் முன் போலவே இலைகளைப் பறித்துப்போட அவை இலிங்கத்தின் திருமுடியில் விழுந்தன.

இப்படியிருக்கக் கொழுத்த பெண் மான் ஒன்று அங்குத் தண்ணீர் குடிக்கவந்தது. வேடனும் அதைக் கொல்ல அம்பைவிட ஆலோசிக்கும்போது, அம்மான் அவனைப்பார்த்து இதற்குமுன் ஒருபெண்மான் இங்கு வந்ததா ? எங்கே போயிற்று சொல் என்று கேட்டது. வேடன் முன்வந்தமான் இதுதானே அல்லது வேறு மானே என்று சற்று ஆலோசித்து முடிவில் இது

வேறுமானுகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்து நான் என்குடும்ப சம்ரக்ஷணார்த்தம் உன்னை இப்போது கொல்லப்போகிறேன். உன் இஷ்டதெய்வத்தை நினைத்துக்கொள் என்றான்.

அப்பொழுது அந்தமான், என்னை அடித்தால் உனக்குப் போதுமான ஆகாரமாகாது. சற்றுநேரத்தில் மிகக்கொழுத்த ஆண்மான் ஒன்று இங்குவரும் அதைக் கொல்; என்னைவிட்டுவிடு; அப்படி அது இங்குவராவிடில் நானே உன்னிடம் வருகிறேன் என்று உறுதிமொழிகூறிப் போயிற்று. இவ்விதம் வலையின்நடுவிலிருக்கும் அவ்வேடனுக்கு இரண்டாவது யாமம் கழிந்தது. பிறகு ஆண்மான் வரவை எதிர்பார்த்தவனாய் முன்போல் இலையைப்பறித்து இலிங்கத்தின் மேலெறிந்தான். 'சிவசிவ' எனக்கு இப்படி யின்றையபொழுது தீர்ந்ததே என்ற விசனத்தால் தூங்கவும் இல்லை.

இப்படியிருக்கப் பெண்மான்களைத் தேடிக்கொண்டு வரும் ஆண்மானைக் கண்டான். அம்மான் இவனைப் பார்த்ததும், இவனே நமது மனைவிகளைக் கொன்றிருக்கவேண்டும்; மனைவியில்லாத வாழ்வைவிட இவனால் இறப்பதே நலம் என்று தீர்மானித்து, வேடனைப் பார்த்து இங்கே வந்த இரண்டு பெண்மான்களும் எங்கே சென்றன? அல்லது உன்னால் கொல்லப்பட்டனவா? என்று கேட்டது. அதற்கு வேடன், இது சாமானிய மானல்ல. இது பெரிய தேவதையாயிருக்க வேண்டும் என்று ஆலோசித்து அப்பெண்மான்கள் இரண்டும் உன்னை எனக்கு ஆகாரமாக அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்து போயின. அதன்படி உன்னை இப்போது கொல்லப்போகிறேன் என்றான்.

அப்பொழுது ஆண்மான் வேடனைப் பார்த்து அப்பெண்மான்கள் சொன்ன சத்தியவாக்கை நம்பி எப்படி அவர்களை விட்டாயோ அவ்வண்ணமே என் பிரமாண வாக்கை நம்பி என்னையும் விடு. நான் வீடு

சென்று அவர்களுடன் கலந்து எல்லோரும் உன்னிடம் கட்டாயமாய் வருவோமென்று நம்பிக்கை செய்து கொடுத்து வீடு சென்றது. பிறகு வேடன் தான் வீசிய வலைக்குள்ளே இரவுமுழுவதுமிருந்து காலையில் வில்வத்தைப் பறித்துச் சிவசிவ என்று ஆயாசத்தோடு அங்கே போட்டுவிட்டுச் சிவசிவ என்று சொல்லிக் கொண்டே குளிர் தாங்கமாட்டாதவனாய் தன் வீட்டுக் குச்சென்றான். போகும்போது ஒரு பெண்மான் அங்கேவர, அதை அடிக்க அம்பை எடுத்தான். அப்போது அப்பெண்மான் வேடனைப் பார்த்து ஓ தர்மான்மாவே! அம்பை எய்யாதே. நான் மலடல்ல. எனக்குக் குட்டிகள் இரண்டு இருக்கின்றன. அவைகளை சம்ரக்ஷிக்கும் என்னைக்கொன்றால் உனக்குப் பாபமே வரும். அல்லது இந்நீதிதவறி என்னைக்கொல்ல எண்ண முள்ளவனாயிருப்பாயாகில் என் குட்டிகளை என் தோழி களிடம்விட்டு விடைபெற்று உன்னிடம் வருகிறேன் என்று உறுதிகூறி வீட்டுக்குத் திரும்பியது.

வேடனும் சத்தியவாதிகளான அம்மான்களுடைய வார்த்தையை நினைத்து அவைகளோ எப்பொழுதும் கூட்டமாயிருப்பவைகள்; இவைகளைக் கொல்லநினைத்த நான் என்ன கதியை அடைவேனென்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அவனுடைய குழந்தைகள் பசியால் பீடிக்கப்பட்டுச் சமீபத்தில் வந்து உணவு ஒன்றும் இல்லாமையைக்கண்டு ஆசையற்றவர்களாய்த் திரும்பிப்போயின.

இவ்வாறாக வீட்டுக்குப்போன ஆண்மான் தனது மனைவி கன்றை ஈன்றதும் மற்றும் பெண்மான் களுடனும் குட்டிகளுடனும் புறப்பட்டு 'ஸரஸ்' என்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பூர்வஜன்ம ஞானத்துடன் மஹாலிங்கத்தையுந் தரிசித்துக் கொண்டு வேடனுடைய வீட்டுக்குச்சென்று அவர்களைப் பார்த்து 'எங்களைக் கொன்று உங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்றது. அதைக் கேட்ட

வேடன் இனி மாமிசத்தால் எனக்கு ஆகவேண்டுவது ஒன்றுமில்லை. சத்தியவாதிகளான உங்களை யான் கொல்லமாட்டேன். இனி யான் எந்த உயிரையும் கொல்லேன். இதோ எனது அம்பையும், வில்லையும் முறித்துப்போட்டுவிட்டேன். நீங்கள் சுகமாக உங்களிருப்பிடம் செல்லுங்கள் என்றான்.

அதற்கு மான்கள் "நாங்கள் உன்னிடம் வருவதாக வாக்குக்கொடுத்தபடி திரும்பி வந்தோம்; எங்களைக் கொல்வாயாக; இனி யாங்கள் வீட்டுக்குத் திரும்போம்" என்றன. அதற்கு வேடன் நீவிரே எனக்குச் சுற்றம்; தர்மத்தை உபதேசித்ததால் குரு. ஆகையால் உங்களைக் கொல்லமாட்டேனென்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது ஆகாயத்தில் தேவதுந்துபி முழங்கத் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். தேவ தூதர்கள் தேவ விமானத்தைக் கொண்டுவந்து ஓ வேடனே! நீ சிவராத்திரியன்று உபவாசமிருந்து யாமந் தோறும் கண்விழிப்புடன் பூசை நடத்தியதால் உனது பாவங்கள் எல்லாம் ஒழிந்தன. உன் சரீரத்துடனே ருத்ரபகவானுடைய திருக்கயிலாயத்தை அடைவாயாக; ஓ மானே! நீயும் உனது மனைவி மக்களுடன் நக்ஷத்திர மண்டலத்துக்குப் போய்ச் சேர்வாயாக என்றனர். வேடனும் விமானத்திலேறிக் கயிலாயம் சேர்ந்தான். மானும் அப்படியே நக்ஷத்திர மண்டலத்தை அடைந்தது. அந்த இரண்டு பெண்மான்களுக்கும் பின்புறத்தில் உள்ள ஆண்மானையுஞ், சேர்த்து மூன்று நக்ஷத்திரங்களாக்கி அக்கூட்டத்தை மிருகசீரிட நக்ஷத்திரம் என்கிறார்கள். இற்றைக்கும் அந்த மிருகசீரிட நக்ஷத்திரம் யாவராலும் பார்க்கப்படுகிறது. (மிருகம்—மான், சீர்ஷம்—தலை, மான் தலை போலக் காணப்படும் நக்ஷத்திரம் என்பது பொருள்.) சிவராத்திரி விரதம் மிகுந்த பலன் தருமாகையால் யாவருமன்று கண்விழிப்புடன் உபவாசமிருந்து, சிவபூசையைச் செய்வார்களாக.

உ

சிவமயம்

# சிவபூஜாஸ்தவம்*

## உரைப்பாயிரம்

சூரியனார்கோயில் ஆதீனத்து மஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகளது
அடியார் கூட்டத்துள் ஒருவராகிய,
ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்அவர்கள்.

शिवं सदाशिवं रुद्रं सदेशादि गुरू नपि ।
नत्वेश पूजास्तोत्रस्य विवृतिः क्रियते मया ॥

*சிவன்றனைச்சதா சிவன்றனைத் திகழுருத் திரனைத்*
*தவந்தருஞ்சதா சிவாதிய குரவர்கடமையும்*
*உவந்திறைஞ்சியிங் குரைத்திடப் படுஞ்சிவ பூசைத்*
*தவந்தனக்கெனல் விருத்திநற் சார்பினோர் பொருட்டே.*

ஈண்டுத் திருவுடைய கோளகீ மடத்தில் வைகிய ஆசிரியர் ஞானசிவாசாரியர் தமது சந்தானத்துக்குரிய ஆகமமாகிய வாதுளத்தின் பேதமான துவிசதிகாலோத்தரம் முதலியவற்றின் பொருளை ஆராய்ந்து ஏழாயிரம் கிரந்தமுடைய ஞானரத்நாவளியை அருளிச்செய்து, அதன்கண் பலபிரமாண சுலோகங்களால் துணிந்துரைக்கப்பட்ட நித்தியாநுட்டான (நாட்கடன்) நினைவினை, பிராத: என்பது முதல் விப்ரோத்துங்க என்பது இறுதியாகவுள்ள பலவேறு சந்தமுடைய நாற்பத்தேழு விருத்தச் செய்யுட்களால் சிவபூஜாஸ்தவம் என்பதோர் பெயரால் தொகுத்து அருளிச் செய்கின்றார்.

---

*சிவபூஜாஸ்தவம் என்னும் நூலின் உரைப்பாயிர மொழிபெயர்ப்பு.

# The Four Paths

[ *Late J. M. Nallaswami Pillai, B. A., B. L.* ]

(Continued from Page 89)

The Four Paths

So that all our understanding of him till the final goal is reached will be merely fictitious, or use a better word, symbolical. The conception whether that of the Bhakta or Yogi, Hindu or Christian will only be symbolical. We introduce a real element into it when we introduce love in our conception of God. And this conception naturally divides itself into four forms, that of master and servant, parent and child, friend and friend, and lover and loved. All other conceptions can be reduced into these four. There is love and knowledge in all these different forms of Bavana or Sadana. As our Lord and master, we do Him and His bhaktas, loving service and obedience and reverence. In the master, we lose our own identity. To the father and mother, obedience and service and reverence and love in a greater degree is exhibited. To the friend we can say 'I am He,' 'He is myself,' 'all mine are His' and 'all His are mine.' In real life, this ideal of friendship is rarely manifested. Our people could hardly appreciate the act of the saint who gave his wife to the bhakta who demanded her of him. How would you like the Pourtrayal of Hall Caine of the lowborn and illiterate Manxeman who loved and continued to love more and more the high born and cultured aristocrat who betrayed him, cheated and robbed him of his betrothed and forfeited all claims to

regard respect. It was because his friendship on his own part was sincere and true.

It is this ideal of the friendship and the bavana required under it whice reveals the meaning of the formulas of Tatvamasi and Aham Brahmasmi, given out as the mantras to be practiced by the Yogi. In Yoga, the identity of bavana is fully reached. When we understand this fully, we can understand all the episodes in the life of St. Sundara, who was of the very image of Somasundara and whom God chose as his own 'friend.'

*ஏழிசையாய் யிசைப்பயனாய் யின்னமுதாய் யென்னுடைய*
*தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி*
*மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா*
*ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னா ரூரிறைவனையே.*

In life, have you felt the hundredth part of this love for your friend, the gnawing pain at heart when you are separated and the boundless joy when you met.

These are then the four paths or margas Chariya, Kriya, Yoga and Gnana, otherwise called Dasa, Satputra and Saha and Sanmarga. And the various duties assigned under each are only such as our love of the master or father or friend or lover will induce us to manifest in tokens of our love. These duties are meaningless except as tokens of our love and as diciplining us to love and love more God and his creatures.

*என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டு*
*பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்*

அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை யெய்தவொண் ணாதே.

These duties are for the Dasa Margi.

எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே.

Our christian friends who regard our building Temples and spending in ornaments and flowers will scarcely realize why millions of money are spent on churches and church decorations. The money spent in flowers on Easter and Christmas festivities in churches comes to a million or more each year. Christ rebuked the man who held the joint purse and who objected to Mary's wasting that precious scented oil on Christ's feet. It was not the value of the oil that was worth anything but the love that prompted that sacrifice was worth all.

But it is not by costly gifts alone we can manifest our love.

The duties of Satputra margi are as follows.

"பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தல்மற்
றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே."

ஆதாரா சோதனை யானாடி சத்திகள்
மேதாதி யீரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே.

are those of the Sahamargi. The eight forms of Yoga referred to are Yama, Niyama, Asana, Pranayama, Pratyakara, Darana, Dyana and Samadhi, and we note only here the definition of Yama and Niyama.

Yama is Ahimsa, Satyam, refraining from theft, celibacy or chastity, mercifulness, devoid of deceitfulness, contentedness, courage, taking little food and purity. Niyama is performing tapas, and japam, vratam, believing in God, worshipping Him, reading and meditating on the shastras, being cheerful, fearful of evil and intelligent.

The duties of Sanmarga are stated as follows.

பசுபாசம் நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கரியாத நெஞ்சம் கரியக் கசிவித்து
ஒசியாத உண்மைச் சொரூபோ தயத்துற்று
யசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.

These four sadanas are so arranged that one may lead into the other. And the forms and symbols in each are so chosen that as one reaches the higher path, fresh meaning and fresh beauty and life may burst forth, as his own intelligence and love ripens to receive the fresh life.

The Temple built of brick and mortar becomes the very soul and heart of the Yogi and the Sivalinga becomes the Loving Presence and Light of the Supreme. The food பலி offered by the devotee gradually comes to mean the sacrifice of anava or தற்போதம்.

The beauty of such books as the Tiruvachaka, Thevara and Tiruvaimozhi consists in this that it

furnishes the required mental and spiritual food to the illiterate and the most cultured minds.

That these four paths are natural divisions, it will be readily perceived. The world's great religions may be ranged under one or other of these heads. Mahomedanism and the ancient Judaism fall under the first division. It was the merit of Jesus christ that he brought into greater prominence the Fatherhood of God. The following quotations from the Bible will show that the other paths are not unrecognized by Jesus Christ.

"Ye call me Master and lord and ye say well for so I am," St. John. XIII 13.

" If ye love me keep my commandments. XIV 15.

Little children, yet awhile I am with you; a new commandment I give you. That ye love one another; as I have loved you; that ye also love one another. XIV 33. 34.

"Greater love hath no man that this, that a man lay down his life for his friends."

"Ye are my friends, if ye do whatsoever I command you."

"Henceforth I call you not servants; for the servant knoweth not what the master doeth, but I have called you friends, for all things that I have heard of my father I have made known unto you".

*(To continue)*

## காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகம்

இக்கழகத்தின் சார்பில் நாளது சித்திரபானுவூ தைமீ 13, 16, 17, 18 ஆகிய நான்கு நாட்களிலும் முறையே திலகவதி அம்மையார், மெய்கண்டதேவர், தாயுமானவர், திருவேகம்பநாதர் ஆகிய மூர்த்திகளுக்குத் திருமுழுக்கு வழிபாடு மிகச்சிறப்பாக நடத்தப் பெற்றது. அதுகாலை திரு. சே. வெங்கடராமச் செட்டியார், திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., திரு. வி. திருஞானசம்பந்த முதலியார், திரு. ஆ. நமச்சிவாய முதலியார் ஆகியோர்கள் சமய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

## திரிசிராமலை
## தனுர்மாதத் திருப்புகழ்ச் சபை
## ஆறுவதாண்டு விழா.

இச்சபையின் 6-வதாண்டு விழா 13—1—43 அன்று மலைக் கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிசித்பவானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், திரு. R. பஞ்சநதம் பிள்ளை, திரு. அ. நடேசமுதலியார் ஆகிய பெரியோர்கள் முருகன் பெருமைகளைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். வழக்கம்போல் இவ்வாண்டிலும் இச்சபையினர் தனுர்மாதத்தில் தருமபுர ஆதீன மௌனமடம் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி சந்நிதியில் தொடங்கி திருமுறை, திருப்புகழ் பாராயணத்துடன் கிரிவலம் செய்துவந்தனர்.

<u>மதிப்புரை</u>

## காமகோடி

காஞ்சி காமகோடி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் மடத்திலிருந்து வெளிவரும் அரிய தமிழ்ப்பத்திரிகை. திருச்சி ஸ்ரீதாயுமானவர் புராணவிளக்கம், காஞ்சி காமகோட்டத்து ஸ்ரீகாமாக்ஷி புராண விளக்கம், தத்வவிசாரணை முதலிய அரும்பெரும் விஷயங்களை விளக்கியும், பதிதருமம் பசு தருமங்கள் செய்யவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியும் விளங்க வைக்கிறது. ஆங்காங்கும் ஸ்ரீமத் சுவாமிகளவர்களின் ஆக்ஞைக் கிணங்க புராண படனங்கள் பாகவியன நடக்கப்பெறும் செய்திகளும் தரப்பட்டிருக்கின்றன.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தினின்றும் திங்கள்தோறும் கிருத்திகை நாளன்று வெளிவரும் ஓர் அரிய தமிழ் வெளியீடாகும். இதன் முதன் மலர் முதல் இதழ் தைப்பூசத் திருநாளன்று வெளிவந்துள்ளது. கோவை, சிவக்கவிமணி. திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், பழநி, சிவத்திரு. ஈசானசிவாசாரியார் முதலிய பேரறிஞர்களால் எழுதப்பெற்ற திருமுருகன், சைவசமயம், தைப்பூசநன்னாளின் தத்துவப் பொருள்கள் முதலிய கட்டுரைகள் படிப்போர்க்குச் சைவசமய உணர்ச்சியை நன்கு ஊட்டுகின்றன. பழநி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., அவர்களும் பழநி, சிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர், சிவத்திரு. ஈசான சிவாசாரியார் அவர்களும் இவ்வெளியீட்டிற்கு முறையே ஆசிரியரும், உதவியாசிரியருமாக அமர்ந்துள்ளார்கள். தனிப்படி (அஞ்சற்கூலி வேறாக) அணா 0—2—0.


தந்தி:- 'காசி' | Tel:- '**Kasi**'



கும்பகோணம். | Kumbakonam.

எங்கள் ஷாப்பில் சுத்தக்கட்டி வெள்ளியில் செய்த எங்கள் முத்திரையுள்ள, நாணயப் பொறுப்புள்ள வெள்ளிப் பாத்திரங்களும், தங்க நகைகளும், வளையல், ஒட்டியாணம், சந்திரஹாரம், செயின் வகையராவும், கல்லிழைத்த நகைகளும் கிடைக்கும். கைவசமில்லாத புதுமாதிரியான சாமான்கள் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுப்பதுடன் கவசம், வாகனம் முதலிய பெரிய வேலைகளும் நேர்த்தியாகச் செய்து கொடுக்கப்படும். தருமபுர ஆதீனத்திற்கும் வாகனங்கள் முதலியன செய்து கொடுத்து நன்மதிப்பைப் பெற்றிருக்கிறோம்.

**அ. சு. கனகசபை செட்டியார்,**

பெரியதெரு, கும்பகோணம்.